


**20. 08. 2026**

தலைப்புச் செய்திகள்

1. தென் மண்டல முதலமைச்சர்களின் மாநாட்டை மத்திய உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷா சென்னையை அடுத்த கோவளத்தில் இன்று தொடங்கிவைத்தார்.

2. நியாயவிலைக்கடைகளில் தரமான சன்ன ரக அரிசி குடும்ப அட்டை தாரர்களுக்கு வழங்கப்படும் என்று உணவுத்துறை அமைச்சர் திரு. வெங்கட ரமணன் தெரிவித்துள்ளார்..

3. கூட்டுறவுத்துறையின் கடன் சேவைகள் இணையவழி முறையில் வழங்கப்படும் என்று மாநில கூட்டுறவு அமைச்சர் திரு. காந்திராஜ் அறிவித்துள்ளார்.

4. திருமூர்த்தி அணையிலிருந்து மண் எடுக்க விதிக்கப்பட்ட தடை விலக்கி கொள்ளப்படுவதாக மாநில நீர்வளத்துறை அமைச்சர் திரு. ஆனந்த் கூறியுள்ளார்.

5. சுதந்திர போராட்ட வீரர் ஒண்டி வீரனின் 255-ஆவது நினைவு தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

இனி விரிவான செய்திகள்

***************

அமித்ஷா

தென் மண்டல முதலமைச்சர்களின் 31ஆவது மாநாடு மத்திய உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷா தலைமையில் சென்னையை அடுத்த கோவளத்தில் இன்று நடைபெற்று வருகிறது.

மாநிலங்களுக்கிடையிலான ஒருங்கிணைப்பு, பொருளாதார வளர்ச்சி, தொழில்துறை முதலீடுகள், நட்புறவை வலுப்படுத்துவது, கட்டமைப்பு மேம்பாடு, நீர்வளங்கள் பகிர்வு, கல்வி சுகாதாரம், தகவல் தொழில்நுட்பம், பேரிடர் மேலாண்மை, குற்றங்கள் தடுப்பு, எல்லை பிரச்சனைகள் போன்றவை குறித்து இதில் விரிவாக விவாதிக்கப்பட்டு வருகிறது.

முதலமைச்சர் திரு.ஜோசப் விஜய் கர்நாடகம், கேரளம், ஆந்திர மாநில முதலமைச்சர்கள் தெலங்கான துணை முதலமைச்சர் புதுச்சேரி, அந்தமான் நிக்கோபார் தீவுகளின் துணை நிலை ஆளுநர்கள், லட்சதீவு நிர்வாக தலைவர் உள்ளிட்டோர் இதில் பங்கேற்றுள்ளனர்.

**************

வெங்கடரமணன்

தமிழகத்தில் உள்ள அனைத்து நியாயவிலைக்கடைகளிலும் தரமான சன்ன ரக அரிசி வழங்கப்படும் என்று மாநில உணவுத்துறை அமைச்சர் திரு.வெங்கடரமணன் கூறியுள்ளார்.

சட்டப்பேரவையில் இன்று உணவு மற்றும் கூட்டுறவுத்துறை மானியக்கோரிக்கைகள் மீதான விவாதங்களின்போது குறுக்கிட்டு பேசிய அமைச்சர் அதிக ஈரப்பதம் காரணமாக பழுப்பு நிறத்தில் இருந்த அரிசியை பயன்படுத்த முடியாத நிலை இருந்ததாகவும் தற்போது அந்த நெல்லில் 17 சதவிகிதம்

ஈரப்பதத்தை உலர்த்தி அதிலிருந்து தரமான அரிசி மக்களுக்கு வழங்கப்படும் என்றார்.

அரசிடம் தற்போது 54 லட்சம் டன் நெல் உள்ளது என்றும், அது போதுமானது என்றும், தேவைப்பட்டால் மட்டுமே மத்திய தொகுப்பிலிருந்து அரிசி வாங்கப்படும் என்றும் அமைச்சர் திரு.வெங்கட ரமணன் குறிப்பிட்டார்.

***************

காந்தி ராஜ் – மானியக்கோரிக்கை

கூட்டுறவுத்துறையின் கடன் சேவைகள் இணையவழி முறையில் வழங்கப்படும் என்று மாநில கூட்டுறவு அமைச்சர் திரு. காந்திராஜ் அறிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் கூட்டுறவுத்துறை மானியகோரிக்கையை இன்று தாக்கல் செய்து பேசிய அவர், வேளாண் கூட்டுறவு கடன்களை உரிய காலத்தில் திருப்பி செலுத்தும் விவசாயிகளுக்கு முழுமையான வட்டி விலக்கு அளிக்கப்படுவதாக கூறினார்.

***************

கீர்த்தனா

நெய்வேலி சுரங்கம் அருகில் வசிக்கும் கிராமங்களில் உள்ள விவசாயிகளை பாதுகாக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தொழில்துறை அமைச்சர் செல்வி கீர்த்தனா கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அஇஅதிமுக உறுப்பினர் திரு.அருண்மொழி தேவன் கொண்டுவந்த கவன ஈர்ப்பிற்கு பதில் அளித்த

அமைச்சர் நெய்வேலி நிறுவனம் கிராம மக்கள் மற்றும் மாநில அரசு நிர்வாகத்திற்கிடையே முத்தரப்பு பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு சுமூக தீர்வுகள் எடுக்கப்பட்டு வருவதாக கூறினார்.

இந்த கவன ஈர்ப்பு தீர்மானத்தின் மீது பேசிய தேமுதிக உறுப்பினர் திருமதி பிரேமலதா விஜயகாந்த், பா.ம.க. உறுப்பினர் திருமதி சௌமியா அன்புமணி ஆகியோர் NLC நிறுவனத்தின் செயல்பாடுகளை கடுமையாக விமர்சித்தனர்.

உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியுள்ள பிரச்சனைகளுக்கு தீர்வு காணப்படும் என்று அமைச்சர் உறுதி அளித்தார்.

சட்டப்பேரவையில் திமுக உறுப்பினர் திரு.தங்கம் தென்னரசு சிவகாசி பட்டாசு ஆலைகள் குறித்து எழுப்பிய பிரச்சனைக்கு பதில் அளித்த அமைச்சர் கீர்த்தனா சிவகாசி பகுதிகளில் 177 பட்டாசு ஆலைகள் விதி மீறலில் ஈடுபட்டது கண்டறியப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டதாக கூறினார்.

இந்த பிரச்சனைகள் சுமூகமாக முடிவடைந்த நிலையில் மக்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்த சில அரசியல் கட்சிகள் கண்டன ஆர்பாட்டங்களை நடத்துவதாக குறை கூறினார்.

இதற்கு பதில் அளித்த திமுக உறுப்பினர் திரு.தங்கம் தென்னரசு பட்டாசு தொழில் பாதிப்பு அடைவதால் தான், பொதுமக்கள் போராட்டம் நடத்துவதாக எடுத்துரைத்தார்..

தீபாவளி நெருங்கும் நேரத்தில் பட்டாசு உற்பத்தி பாதிக்காத வகையில் இந்த பிரச்சனையை மாநில அரசு தீர்க்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

***************

பொதுப்பணித்துறை

சவுதி அரேபியாவில் ஈரானிய கடற்கொள்ளையரால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழக மீனவரின் உடலை தாயகம் கொண்டுவர மாநில அரசு விரைந்து நடவடிக்கைகளை எடுத்து வருவதாக மாநில பொதுப்பணித்துறை அமைச்சர் ஆதவ் அர்ஜூனா கூறியுள்ளார்..

சட்டப்பேரவையில் இன்று இதுதொடர்பான சிறப்பு கவன ஈர்ப்பு தீர்மானத்திற்கு பதில் அளித்து பேசிய அமைச்சர் இதுதொடர்பான புலன் விசாரணை சவுதியில் நடைபெற்று வருவதாகவும், அது முடிவடைந்ததும், பலியான மீனவரின் உடல் தமிழகத்திற்கு கொண்டுவரப்படும் என்றும் கூறினார்.

இந்த சம்பவத்தில் காயமடைந்த மூன்று மீனவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கான நடவடிக்கைகளையும் அரசு மேற்கொண்டுள்ளதாக தெரிவித்தார்.

***************

நீர்வளத்துறை

திருமூர்த்தி அணையிலிருந்து விவசாயிகள் மண் எடுப்பதற்கு விதிக்கப்பட்ட தடை விலக்கி கொள்ளப்பட்டு, நாளைமுதல் மண் எடுக்க அனுமதி வழங்கப்படுவதாக நீர்வளத்துறை அமைச்சர் திரு.ஆனந்த் தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் இன்று இதனை தெரிவித்த அவர், ஏற்கனவே சில புகார்கள் வந்ததன் அடிப்படையில், மாவட்ட நிர்வாகம் இடைக்கால தடையை விதித்திருந்ததாக சுட்டிக்காட்டினார்.

கஞ்சம்பட்டி கால்வாயை அமைக்க தூத்துக்குடியிலிருந்து - ராமநாதபுரம் வரை நிலம் எடுப்பு பணிகளுக்கு 24 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்திருப்பதாகவும் அமைச்சர் கூறினார்.

***************

உயர்கல்வித்துறை

கல்லூரி வளாகங்களில் ஒழுங்கு முறையை பராமரிக்க உயர்கல்வித்துறை அனுப்பிய சுற்றறிக்கையில் இடம்பெற்றுள்ள சில முரண்பாடான வாசகங்கள் திரும்ப பெறப்பட்டுள்ளதாக மாநில உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.விஸ்வநாதன் தெரிவித்தார்.

சட்டப்பேரவையில் இதுதொடர்பான கவன ஈர்ப்பிற்கு இன்று பதில் அளித்து பேசிய அமைச்சர் ஒழுங்குமுறையை பராமரிக்கும் நோக்கில் தான் அந்த சுற்றறிக்கை அனுப்பப்பட்டதாக குறிப்பிட்டார்.

மாணவர்களின் உரிமையை தமிழக அரசு ஒருபோதும் கட்டுப்படுத்தாது என்றும், அவர்களின் நியாயமான கோரிக்கைகளை அரசு நிறைவேற்றும் என்றும் தெரிவித்தார்.

***************

ஸ்ரீநாத்

ஆந்திர மாநில மீனவர்களால் சிறை பிடிக்கப்பட்ட தமிழக மீனவர்களின் படகுகளை விடுவிக்க மாநில அரசு உரிய நடவடிக்கை எடுத்துவருவதாக மீன்வளத்துறை அமைச்சர் திரு.ஸ்ரீநாத் தெரிவித்தார்.

சட்டப்பேரவையில் இதுதொடர்பான பிரச்சனைக்கு பதில் அளித்த அவர் இதுகுறித்து ஆந்திர மாநிலத்துடன் பேச்சுவார்த்தைகள் நடத்தி வருவதாகவும் விரைவில் படகுகள் மீட்கப்படும் என்றும் தெரிவித்தார்.

***************

வன்னியரசு

வெளிநாடுகளில் உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கு அம்பேத்கர் அயலக கல்வி உதவி திட்டத்தின் கீழ் நடப்பு நிதியாண்டில் 131 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்திருப்பதாக மாநில சமூக நீதித்துறை அமைச்சர் திரு.வன்னியரசு கூறினார்.

சட்டப்பேரவையில் இது தொடர்பான கவன ஈர்ப்பிற்கு பதில் அளித்த அவர், இந்த திட்டத்தின் கீழ் 362 மாணாக்கர் பயனடைந்து வருவதாக குறிப்பிட்டார்.

மலேசிய நாட்டில் பயிலும் ஒரு மாணவருக்கு குறித்த காலத்தில் நிதி உதவி வழங்கப்பட வில்லை என்று திமுக உறுப்பினர் திரு.கோவி செழியன் தெரிவித்த குற்றச்சாட்டிற்கு பதில் அளித்த அமைச்சர் இதுவரை சுமார் 48 லட்ச ரூபாய் பல தவணைகளாக மாணவருக்கு வழங்கப்பட்டிருப்பதாக தெரிவித்தார்.

ஏற்கனவே வழங்கப்பட்ட தொகைகளின் செலவுகள் குறித்து சரியான விவரங்களையோ ஆவணங்களையோ அந்த மாணவர் அனுப்பவில்லை என்றும், அமைச்சர் கூறினார்.

இந்த உண்மை தன்மை தெரியாமல் சிலர் தவறான கருத்துக்களை ஊடகங்கள் வாயிலாக பரப்பி வருவதாக அமைச்சர் கூறினார்.

அயலக உயர்கல்வி நிதி உதவி திட்டத்தை தமது துறை சிறப்பாக கையாண்டு வருவதாகவும் திரு.வன்னியரசு எடுத்துரைத்தார்.

***************

ரஞ்சித்குமார்

வன பகுதிகளில் காட்டு பன்றிகள் மற்றும் யானைகளால் ஏற்படும் பாதிப்புகளை தடுப்பதற்கான ஆலோசனைகளை வழங்க நிபுணர் குழு ஒன்று அமைக்கப்படும் என்று வனத்துறை அமைச்சர் திரு.ரஞ்சித்குமார் கூறியுள்ளார்.

பேரவையில் திமுக உறுப்பினர் பால் மனோஜ் பாண்டியன் பேசியதற்கு பதில் அளித்த அமைச்சர் விவசாயிகள் பாதிக்காத வண்ணம் உரிய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும் என்றும் இதற்காக முதற்கட்டமாக 20 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

***************

ராஜீவ்காந்தி

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் 82ஆவது பிறந்த தினம் இன்று கொண்டாடப்படுவதை ஒட்டி குடியரசு துணை தலைவர் திரு.சி.பி.ராதாகிருஷ்ணன் பிரதமர் திரு.நரேந்திரமோடி உள்ளிட்டோர் அன்னாருக்கு மரியாதை செலுத்தியுள்ளனர்.

புதுதில்லியில் அன்னாரது நினைவிடத்தில் காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் திருமதி சோனியாகாந்தி உள்ளிட்டோர் மலரஞ்சலி செலுத்தினர்.

ஸ்ரீபெரும்புதூரில் அன்னாரது நினைவிடத்தில் காங்கிரஸ் சார்பில் மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

***************

ஒண் டிவீரன்

சுதந்திர போராட்ட வீரர் ஒண்டிவீரனின் 255-ஆவது நினைவு தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

குடியரசு துணை தலைவர் திரு.சி.பி.ராதாகிருஷ்ணன் வெளியிட்ட செய்தியில் சுதந்திர கனலை பரப்பிய ஒண்டி வீரனின் தியாகத்தை போற்றுவோம் என கூறியுள்ளார்.

நெற்கட்டான்செவல் போர்க்களத்தில் ஆங்கிலேய படைகளை ஒற்றை வீரராக எதிர்த்து தாய் நாட்டிற்காக இன்னுயிரை தியாகம் செய்த ஒண்டிவீரனின் வீரத்தை போற்றுவோம் என முதலமைச்சர் திரு.விஜய் குறிப்பிட்டுள்ளார்.

இந்நாளை ஒட்டி அன்னாரது சொந்த ஊரான தென்காசி மாவட்டம் பச்சேரி கிராமத்தில் அமைந்துள்ள நினைவு தூணில் மாநில அரசின் சார்பில் மரியாதை செலுத்தப்பட்டது.

நெல்லையில் உள்ள மணிமண்டபத்தில் மாநில அமைச்சர்கள் திரு.மரிய வில்சன், திரு.லோகேஷ் தமிழ் செல்வன் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

***************

வாழை ஆராய்ச்சி

திருச்சி தேசிய வாழை ஆராய்ச்சி மையத்தின் 33ஆவது நிறுவன நாள் விழா மற்றும் உழவர் தினவிழா நாளை கொண்டாடப்படுகிறது.

கோடைகால வறட்சியை சமாளிப்பது குறித்து விவசாயிகளுக்கு இதில் எடுத்துரைக்கப்படும் என்று இம்மையத்தின் இயக்குனர் முனைவர் செல்வராஜன் கூறியுள்ளார்..

வாய்ஸ்

***************

பேட்மிண்டன்

புதுதில்லியில் நடைபெறும் உலக பேட்மிண்டன் சாம்பியன்பட்ட போட்டியின் மகளிர் இரட்டையர் காலிறுதிக்கு ட்ரீஷா ஜாலி, காயத்ரி கோபிசந்த் இணை முன்னேறியுள்ளது.

ஒற்றையர் பிரிவில் காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டங்களில் பி.வி.சிந்து ஆயுஷ் ஷெட்டி ஆகியோர் இன்று களமிறங்குகின்றனர்.

***************

ஹாக்கி

நெதர்லான்ஸ் ஆம்ஸ்டல்வீனில் நடைபெறும் உலக கோப்பை மகளிர் ஹாக்கி போட்டியில் இந்தியா தனது குரூப் சுற்றின் கடைசி ஆட்டத்தில் இன்றுமாலை ஆறரை மணிக்கு இங்கிலாந்தை எதிர்கொள்கிறது.

இதுவரை நடைபெற்ற இரண்டு ஆட்டங்களில் தோல்வியை சந்திக்காத இந்திய அணி இரண்டாவது சுற்றுக்கு முன்னேறும் முனைப்புடன் இதில் களமிறங்குகிறது.

***************

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது